# கலைத்துறை படிப்புக்குப் புதிய கல்லூரி

'யேல்' பல்கலைக்கழகமும் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகமும் இணைந்து 'லிபரல் ஆட்ஸ் காலேஜை' 2013ம் ஆண்டு தொடங்க உள்ளன. இந்தக் கல்லூரியில் ஆண்டுக்கு 250 மாணவர்கள் கல்வி கற்பார்கள் என்று இரு பல்கலைக் கழகங்களும் தங்கள் அறிக்கையில் கூறின.

சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகத்திற்கு அருகிலுள்ள பல்கலைக் கழக நகரத்தில் கட்டவிருக்கும் மூன்று கல்லூரி விடுதிகளில் தங்கி, மாணவர்கள் கல்வி கற்பார்கள் என்றன இரு பல்கலைக் கழகங்கள்.

இந்தக் கல்லூரியும் தங்கும் விடுதியும் முன்னாள் 'வாரன் கோல்ஃப் சங்கம்' இருந்த இடத்தில் அமையவிருக்கின்றன.

இந்தக் கல்லூரியில் படிக்கும் மாணவர்கள் முதல் இரண்டு ஆண்டுகள் ஐரோப்பிய, ஆசிய பாடங்களைப் படிப்பார்கள். கலைத்துறையிலும் அறிவியல் துறையிலும் ஹானர்ஸ் பட்டம் பெறுவார்கள். வரும் காலங்களில் இந்தப் பட்டப்படிப்போடு சேர்த்து நிபுணத்துவ கல்வியை அறிமுகப் படுத்தும் எண்ணமும் உள்ளதாக என்யுஎஸ் தெரிவித்தது.



என்யுஎஸ் நகரத்தின் வரைபடம்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.